# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 12 | வெள்ளிக்கிழமை | 25.04.2025 | கதிர் 178



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கோரி கிளிநொச்சியில் நீதி கோரி போராட்டம்





கிளிநொச்சி, ஏப். 25

கிளிநொச்சியில் நீதி கோரி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று வெள்ளிக்கிழமை மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோரின் 7➤

# இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் எதிர்வரும் திங்கட்கிழமை ரணில்



### சட்டத்தரணி ஊடாக அவர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முன்னிலையாவார் என அவரது சட்டத்தரணி இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுக்கு அறிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றியபோது பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை காசோலையாக பெற்று அதனைப் பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டமை தொடர்பில் இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 7➤

## பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு சஜித் இரங்கல்



கொழும்பு, ஏப். 25

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று வெள்ளிக்கிழமை காலை வத்திக்கான் தூதரகத்துக்குச் சென்று மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்/க்கு இரங்கல் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள வத்திக்கான் தூதரகத்துக்கு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கையின் வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதுவர் பேராயர் பிரயன் உடெய்க வேவைச் சந்தித்து சிறிது நேரம் உரையாடியதைத் தொடர்ந்து தனது 7➤

## தெல்லிப்பளை மகளிர் இல்லத்தில் 22 வயது யுவதி ஒருவர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணம், தெல்லிப்பளையில் உள்ள மகளிர் இல்லம் ஒன்றில் தங்கியிருந்த யுவதி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

22 வயதுடைய யுவதியே இவ்வாறு உயிரிழுந்துள்ளார். அவருடைய சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 7➤

## பஸ் விபத்தில் மாணவர்கள் உட்பட 28 பேர் படுகாயம்!




மஹியங்கனை, ஏப். 25

பதுளை , மஹியங்கனை, திஸ்ஸபுர பிரதேசத்தில் இடம பெற்ற பஸ் விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட 28 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று மஹியங்கனை 7➤

## மித்தெனிய முக்கொலை: நாடு கடத்தப்பட்டவர் கைது



கொழும்பு, ஏப். 25

மித்தெனிய முக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் இந்தியாவில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட நிலையில், இன்று குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். 7➤

## கண்டிக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு யாத்ரீகர்களின் நலன் விசாரித்த ஜனாதிபதி!

கொழும்பு,ஏப்.25

கண்டி, ஸ்ரீ தலதா மாளிகையில் இடம்பெற்று வரும் புனித தந்ததாது கண்காட்சியை பார்வையிடுவதற்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் கூடியுள்ள நிலையில், அவர்களை சந்திப்பதற்காக அநுர குமார திசாநாயக்க நேற்று இரவு (24) அப்பகுதிக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

புனித தந்ததாது கண்காட்சியை பார்வையிட நீண்ட வரிசையில் காத்து நிற்கும் மக்களின் தேவைகளை கேட்டறிவதற்காகவும், நலன் விசாரிப்பதற்காகவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்றிரவு கண்டி நகரின் பல இடங்களுக்குச் சென்றுள்ளார்.

இதேவேளை, வரிசையில் காத்திருந்த மக்களுக்கு நேற்றிரவு தன்சல் (உணவு தானம்) வழங்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ தலதா வழிபாடு இன்று (25) எட்டாவது நாளாகவும் இடம்பெறவுள்ளதுடன், குறித்த நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஸ்ரீ தலதா புனித தந்ததாது கண்காட்சியை பார்வையிடுவதற்கு ஏற்கனவே 400,000 யாத்திரிகர்கள் கண்டிக்கு வருகை தந்துள்ளதால், பொதுமக்களின் நலன்கருதி கண்டிக்கு பயணிப்பதைத் தவிர்க்குமாறு அதிகாரிகள் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டேன் பிரியசாத் சுட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகநபரை விளக்கமறியலில் வைத்து விசாரிக்க அனுமதி!

சமூக செயற்பாட்டாளர் டேன் பிரியசாத் சுட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை தடுப்பு காவலில் வைத்து விசாரிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் இன்று (25) அனுமதி வழங்கியுள்ளது.

கொலையுடன் சம்பத்தப்பட்ட பிரதான சந்தேகநபரை, மிரிஹான சிறப்பு புலனாய்வுப் பிரிவினர், கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவல முன்னிலையில் இன்றையதினம் ஆஜர்படுத்திய வேளையில் நீதவானால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## தெவிநுவர இரட்டைக் கொலை: மற்றுமொரு சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஏப். 25

மாத்தறை -தெவிநுவர பகுதியில் விஷ்ணு ஆலயத்துக்கு அருகில் உள்ள சிங்காசன வீதியில் இரண்டு நபர்களைச் சுட்டுக்கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தர, தலல்ல தெற்கு பகதியில் வசிக்கும் 33 வயது நபரே நேற்று வியாழக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இரட்டைக் கொலை சம்பவத்தில் ஈடுபட்ட துப்பாக்கிதாரிகளுக்கு உடந்தையாக இருந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இன்று இரண்டாம் நாள் தபால்மூல வாக்களிப்பு

கொழும்பு,ஏப்.25

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் தபால்மூல வாக்களிப்பு இன்றும் இடம்பெறவுள்ளது.

இதற்காக நிறுவப்பட்டுள்ள வாக்களிப்பு மத்திய நிலையங்களில் காலை 8.30 முதல் மாலை 4.15 வரை வாக்களிக்க முடியும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று ஆரம்பமான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 28 மற்றும் 29 ஆம் திகதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அரச நிறுவனங்கள், பொலிஸார், முப்படையினர், பாடசாலைகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களின் தபால்மூல விண்ணப்பதாரர்களும் இந்நாட்களில் வாக்களிக்க முடியும். (ஐ)




SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டிடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# இனவாதத்தைத் தோற்கடிப்போம்

கொழும்பு,ஏப்.2

புதிய சட்டங்களை வகுத்தேனும் நாட்டில் இனவாதம் தோற்கடிக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சிங்கள மக்கள் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு வாக்களித்துள்ளனர். முஸ்லிம் மக்கள் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்துள்ளனர். பிளவுபட்டிருந்த நாட்டையும், நாட்டு மக்களையும் நாம் ஒன்றிணைத்துள்ளோம்.

கடந்த காலங்களில் ஆட்சியமைத்தவர்கள் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக இனவாதத்தைப் பரப்பினார்கள். சிங்கள முஸ்லிம் பிரச்சினையை ஏற்படுத்தினார்கள்.

இனவாத அமைப்புகளை வலுப்படுத்தினார்கள். அளுத்கமையில் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. திகனையில் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. தற்போது இவ்வாறான செய்திகளுக்கு இடமில்லை.

எமது நாட்டில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஒருபோதும் இனவாதத்திற்கு இடமளிக்கப் போவதில்லை எனும் உறுதிமொழியை வழங்குகின்றோம்.

இனவாதத்தைத் தோற்கடிப்பதற்கு நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டம் போதுமானதாக இல்லாத நிலையில், புதிதாகச் சட்டத்தினை வகுத்தேனும் இனவாதத்தைத் தோற்கடிப்போம் என்றார். (ஐ)



# இரகசியங்களை மறைக்க கொலை செய்யப்பட்ட டேன்



கொழும்பு,ஏப்.2

பல ரகசியங்களை மறைக்கும் ராஜபக்ச குடும்பத்தின், குறிப்பாக நாமல் ராஜபக்சேவின் நெருங்கிய நண்பரான டேன் பிரியசாத் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஜேவிபி ஆதரவு செய்தி வலைத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன் டேனின் அவரது தகவல்களைத் தேடுபவர்களுக்கு ஒரு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மார்ச் 23 ஆம் திகதி அவர் பேஸ்புக்கில், "நாய்களுடன் தூங்கும்போது, நாய் செல்களுடனேயே விழிக்க நேரிடும். அதனால்தான் நான் நாய்களை விட்டு தூரமாகின்றேன்" என்று பதிவிட்டிருந்தார்.

சிங்கள தேசிய இயக்கம் என்ற அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றிய டேன் பிரியசாத், ஏப்ரல் 22 ஆம் திகதி இரவு நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவின் சாலமுல்ல பகுதியில் உள்ள ஒரு அடுக்குமாடி கட்டிடத்திற்குள் இருந்தபோது அவர் சுடப்பட்டார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் டேன் பிரசாத் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருந்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுச் செயலாளருமான சாகர காரியவசம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருத்தந்தை புனித பிரான்ஸிஸின் இறுதி ஆராதனையில் பங்கேற்க அமைச்சர் விஜித ஹேரத் வத்திக்கான் பயணம்!

*கொழும்பு,ஏப்.2*

*திருத்தந்தை புனித பிரான்ஸிஸின் இறுதி ஆராதனை நிகழ்வில் கலந்து கொள்வதற்காக, இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் விஜித ஹேரத் கலந்துகொள்வார் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.*

*திருத்தந்தை புனித பிரான்ஸிஸின் இறுதி ஆராதனை நாளை (ஏப்ரல் 26) காலை 10:00 மணிக்கு (உள்ளூர் நேரம்) புனித பேதுரு பசிலிக்காவின் புனித பேதுரு சதுக்கத்தில்* **(St. Peter's Square)** *நடைபெறவுள்ளது.*

*இதில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் விஜித ஹேரத் இன்று காலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து எதிஹாட் விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் அமைச்சர் அபுதாபி விமான நிலையத்திற்கு சென்று, அங்கிருந்து மற்றொரு விமானம் மூலம் வத்திக்கானுக்கு பயணிக்க உள்ளதாக திட்டமிடப்பட்டுள்ளது.*

*இதற்கிடையில் திருத்தந்தை புனித பிரான்ஸிஸின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக இலங்கை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன மற்றும் ஹெக்டர் அப்புஹாமி ஆகியோர் நேற்று மாலை வத்திக்கானுக்கு பயணம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*அத்துடன் திருத்தந்தை புனித பிரான்ஸிஸின் இறுதி ஆராதனை நடைபெறும் நாளைய தினம் (26) ஆனது தேசிய துக்க தினமாக அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.*

# தேசபந்து தென்னக்கோன் விவகாரம்– இன்று கூடுகின்றது விசாரணைக் குழு!

*பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அதனை அறிக்கையிடுவதற்கான விசாரணைக் குழு இன்றையதினம் (25) நாடாளுமன்றத்தில் கூடவுள்ளது.*

*பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அதனை அறிக்கையிடுவதற்கான விசாரணைக் குழு சபாநாயகரால் நியமிக்கப்பட்டது.*

*2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 3 (ஈ) மற்றும் 3(உ) பிரிவுகளிற்கு அமைய துர்நடத்தை மற்றும் பதவியின் தத்துவங்களைப் பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு குறித்த சட்டத்தின் 5வது பிரிவுக்கு அமைய விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் கடந்த 08ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.*

*இதற்காக உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி. சூரசேன தலைமையில் மூவரடங்கிய சிறப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.*

*இந்த சிறப்புக்குழுவின் இணை உறுப்பினர்களாக நீதியரசர் (ஓய்வுநிலை) எம்.என்.பி.இத்தவெல மற்றும் தேசிய பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் எம்.லலித் ஏக்கநாயக்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.*

*குறித்த விசாரணைக் குழு புதன்கிழமை (23) நாடாளுமன்றத்தில் முதல் தடவையாகக் கூடிக் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.*

*இதேவேளை, தேசபந்து தென்னகோன் இன்று (25) காலை மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*2023 ஆம் ஆண்டு மாத்தறை வெலிகமவில் உள்ள ரு15 ஹோட்டலுக்கு முன்னால் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக தேசபந்து தென்னகோன் கைது செய்யபட்டது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 10 ஆம் திகதி பிணை வழங்கிய போது, நீதவான் அவருக்கு வழங்கிய அறிவுறுத்தல்களை பின்பற்றவில்லை என தெரிவித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கடந்த 21ஆம் திகதி மாத்தறை நீதவான் நீதிமன்றத்திற்கு சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தது.*

*அதன்படி, மாத்தறை பிரதான நீதவான் அருண இந்திரஜித் புத்ததாச, முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை இன்று மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்திருந்தார்.*

*தேசபந்து தென்னகோனுக்கு பிணை வழங்கப்பட்டபோது, பிணை வழங்கப்பட்டு நீதிமன்ற வளாகத்தை விட்டு வெளியேறும் வரை அவருக்கு பாதுகாப்பு வழங்குமாறு அவரது சட்டத்தரணிகள் நீதவானிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.*

*எனினும் நீதவான் அதற்கு மறுப்பு தெரிவித்து, தேசபந்து தென்னகோன் ஒரு வழக்கில் சந்தேக நபராக இருப்பதாகவும், எனவே அவருக்கு விசேட பாதுகாப்பை வழங்குவது ஏனைய சந்தேக நபர்களுக்கு பாதகமாக இருக்குமெனவும் சுட்டிக்காட்டினார்.*

*நீதவான் மேற்படி உத்தரவை பிறப்பித்ததன் பின்னணியில், தேசபந்து தென்னகோன் நீதிமன்ற வளாகத்தின் பின்புறமாக கார் ஒன்றை வரவழைத்து அதில் ஏறி நீதிமன்ற வளாகத்தை விட்டு வெளியேறினார்.*

*இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிக்கை ஒன்றை வழங்கியது.*

*இந்த நிலையில் அழைப்பாணை விடுக்கப்பட்ட தேசபந்து தென்னகோன், இன்று முற்பகல் மாத்தறை நீதவான் நீதிமன்றத்திற்கு பிரதான வாயில் வழியாக வருகை தந்ததாக தெரிய வருகிறது.*

*இன்றைய தினம் மாத்தறை நீதிமன்றத்தின் பிரதான வாயிலிலும் அதைச் சுற்றியும் இன்று விசேட பாதுகாப்புத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், நீதிமன்ற வளாகத்திற்குள் நுழையும் வாகனங்களும் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

# வார்த்தை வலையில் சிக்கிய தி.மு.க., அரசு!

பல்கலை துணைவேந்தர்கள் நியமனத்தில், கவர்னரின் அதிகாரத்தை பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், எட்டு சட்டத்திருத்த மசோதாக்கள் கொண்டு வரப்பட்டன. அவற்றுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்கவில்லை. அதனால், உச்ச நீதிமன்றம் வரை செல்ல, அந்த நீதிமன்றமும் மிக விசித்திரமான தீர்ப்பை வழங்கிய செய்தி, இரு வாரங்களாக அகில இந்திய அளவில் சர்ச்சையாகி உள்ளது.

கவர்னர் நிறுத்தி வைத்த மசோதாக்களுக்கு, உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து அனுமதி வழங்கி, அவை சட்டமானதாக அறிவித்தது. அடுத்தகட்ட நடவடிக்கையாக, அச்சட்டங்கள் அரசிதழிலும் வெளியிடப்பட்டு, அனைத்து நடைமுறைகளும் நிறைவு பெற்றதாக, தி.மு.க., அரசு நினைத்துக் கொண்டிருக்கிறது.

இதுவரை மிக நுட்பமாக காய் நகர்த்திய, தி.மு.க.,வின் சட்ட வல்லுநர்கள், ஒரு விஷயத்தில் கோட்டை விட்டுவிட்டனர்.

தி.மு.க., அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தத்தில் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்துக்கான ஷரத்தில், 'வேந்தர் என்ற சொல்லுக்கு பதிலாக, மாநில அரசு என்ற சொல் இடம்பெறும்' என்று உள்ளது. இங்குதான் சிக்கல் எழுகிறது.

கவர்னர்தான் வேந்தர். இனி, அவருக்கு அதிகாரமில்லை. மாநில அரசு என்பது என்ன அல்லது யார்? மந்திரி சபையா? அல்லது அதற்கு தலைமை தாங்கும் முதல்வரா? அரசியல் அமைப்பு அப்படி எதுவும் சொல்லவில்லை.

மாறாக, மிகத்தெளிவாக பிரிவு, 154ல் அரசு நிர்வாகத்தின் அதிகாரம் கவர்னரிடம் உள்ளது. அதை அவர் நேரிடையாகவோ, தனக்கு கீழே உள்ள நிர்வாகிகள் வாயிலாகவோ பயன்படுத்தலாம். இதன் பொருள், அரசின் நிர்வாக அதிகாரம் கவர்னரிடம் இருந்தே உருவாவதால், அவரே அதன் தலைவர்.

அடுத்ததாக பிரிவு, 163 கவர்னருக்கு உதவி செய்யவும், ஆலோசனை கூறவும், முதல்வரின் தலைமையில் ஒரு மந்திரி சபை இயங்கும். வானளாவிய அதிகாரம் பெற்றிருந்தாலும், முதல்வர், மந்திரி சபைக்குத்தான் தலைவரே அன்றி, அரசின் தலைவர் அல்ல.



இறுதியாக பிரிவு, 166 மிகத் தெளிவாக, 'மாநில அரசின் அனைத்து நிர்வாக செயல்களும் கவர்னரது பெயரால் நடைபெற வேண்டும்' என்று சொல்கிறது. கவர்னரின் கையெழுத்து இல்லாமல் எந்த அரசாணையும் பிறப்பிக்க முடியாது. இதிலிருந்து என்ன தெரிகிறது? தமிழக அரசு என்றால், சட்டப்படி அது கவர்னரை மட்டுமே குறிக்கும். எனவே, தற்போது தமிழக அரசு கொண்டு வந்து, உச்ச நீதிமன்றம் தலையிட்டு எதை செய்ய நினைத்தார்களோ, அதை அவர்களே முறியடித்துக் கொண்டனர்.

காரணம் முன்னர் வேந்தர் என்ற அதிகாரத்தில், துணைவேந்தர்களை நியமித்த கவர்னர், இப்போது அரசின் தலைவர் என்ற முறையில், அதே அதிகாரத்தைப் பெறுகிறார். இதை என்னவென்று சொல்வது? நம்முடைய இந்த வாதத்திற்கு வலு சேர்க்கின்றனர் கேரள முதல்வர் பினராயி விஜயனும், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும். கேரள அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தத்தில், வேந்தர் என்பதற்கு பதிலாக, மந்திரி சபை என்று மாற்றியுள்ளனர்.

மேற்கு வங்கம் கொண்டு வந்த திருத்தத்தில், முதல்வர் என்றே குறிப்பிட்டுள்ளனர். எனவே, மாநில அரசு என்ற சொல் கவர்னரையே குறிக்கும் என்பதை அறிந்தே, அவர்கள் இப்படி செயல்பட்டுள்ளனர். கோட்டை விட்டது தி.மு.க., அரசுதான். (ஐ)

## துணைவேந்தர்களுக்கு பொலிஸார் மிரட்டல்: கவர்னர் ரவி பரபரப்பு புகார்!



தமிழக அரசு, தனியார் மற்றும் மத்திய பல்கலை துணைவேந்தர்களின் மாநாடு, கவர்னர் ரவி தலைமையில் ஊட்டியில் தொடங்கியது. துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் தொடங்கி வைத்தார். மாநாட்டில், 32 பல்கலைகளின் சார்பில் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். தமிழக அரசுக்கு உட்பட்ட 17 பல்கலைகளில் இருந்து துணைவேந்தரோ, பிரதிநிதிகளோ பங்கேற்கவில்லை.

இந்த மாநாட்டில் கவர்னர் ஆர்.என்.ரவி பேசியதாவது: தமிழகத்தில் கல்வித்தரத்தை மேம்படுத்தவே இந்த கூட்டம் நடத்தப்படுகிறது. நேரில் சென்று நிறைய பல்கலைக்கழகங்களை ஆய்வு செய்த பிறகே, இந்த கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தேன். தமிழகத்தில் அரசு பள்ளிகளின் நிலைமை மோசமாக உள்ளது.

மாநாட்டில் பங்கேற்க கூடாது என துணைவேந்தர்களை போலீசார் மிரட்டி உள்ளனர். இதனால் தமிழக அரசு பல்கலை துணைவேந்தர்கள் யாரும் மாநாட்டில் பங்கேற்கவில்லை. துணைவேந்தர்களின் வீட்டின் கதவை நள்ளிரவில் தட்டி, 'மாநாட்டில் பங்கேற்றால் வீடு திரும்ப முடியாது' என மிரட்டல் விடுக்கப்பட்டு உள்ளது. மாநில பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கப்படவில்லை.

தமிழகத்தில் கல்வி தரம் மோசமாக உள்ளது. ஆட்சியில் இருப்பவர்களுக்கு இந்த மாநாடு நடத்தப்படுவது பிடிக்கவில்லை. சில துணைவேந்தர்கள் ஊட்டிக்கு வந்தும் மாநாட்டில் பங்கேற்கவில்லை. கல்வி அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்ல துணைவேந்தர்கள் மாநாடு உதவியாக இருக்கும். துணைவேந்தர்கள் மாநாட்டில் அரசியல் செய்கிறார்கள். இதுபோன்ற சூழல் இதுவரை ஏற்பட்டது இல்லை. அரசு பள்ளி மாணவர்களுக்கு சிங்கிள் டிஜிட்டல் எண்களை கூட படிக்க தெரியவில்லை. இவ்வாறு கவர்னர் ரவி பேசினார்.

மாநாட்டில் துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் பேசியதாவது: நாட்டின் வளர்ச்சிக்கு கல்வித்துறை வளர்ச்சி அடைவது அவசியம். பயங்கரவாதம் உலக அளவில் அச்சுறுத்தலாக உள்ளது. நாட்டின் வளர்ச்சியை எந்த சூழலிலும் தடுக்க முடியாது. குருகுல கல்வி மிகவும் சிறந்தது. இவ்வாறு அவர் கூறினார்

## உயிரை கையில் பிடித்தபடி 3 கி.மீ., ஓடி வந்தோம்: துப்பாக்கி சூட்டில் தப்பிய செஞ்சி சுற்றுலா பயணியர் அதிர்ச்சி தகவல்

செஞ்சியில் இருந்து காஷ்மீருக்கு சுற்றுலா சென்றவர்கள் தாக்குதல் நடந்த போது அங்கிருந்து 3 கி.மீ., துாரம் மலைப்பாதையில் தப்பியோடி வந்த தகவல் வெளியாகி உள்ளது.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அடுத்த அப்பம்பட்டை சேர்ந்தவர் சையத் உஸ்மான், 45 மீனம்பூரைச் சேர்ந்த சாதிக், 42 ஷபி ரஹ்மான், 28 சையத் ரஹ்மான், 42 செஞ்சியைச் சேர்ந்த சையத் காஜா பாஷா, 55 ராஜா, 44 ஆகிய 6 பேர் ஏப். 19ம் தேதி இரவு ஜம்மு சென்றனர். மறுநாள் காலை அனந்த்நாக் சென்றனர்.

அங்கிருந்து 2 நாட்கள் காஷ்மீரை சுற்றிப் பார்த்துள்ளனர். ஏப். 22ம் தேதி காலை அனந்த்நாக்கில் இருந்து 40 கி.மீ., தொலைவில் உள்ள பஹல்காம் சென்றனர். அங்கு மலை அடிவாரத்தில் இருந்து குதிரை மூலம் சுற்றுலா தலத்திற்கு சென்றனர். அந்த பகுதியை சுற்றி பார்த்து விட்டு மதியம் 215 மணியளவில் மீண்டும் குதிரை ஏறும் இடத்திற்கு வந்தனர்.

அப்போது துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டுள்ளது. முதலில் ஏதோ பட்டாசு வெடிப்பதாக கருதியுள்ளனர். அங்கிருந்த குதிரைக்காரர்கள், துப்பாக்கி சூடு நடக்கிறது உயிர் பிழைக்க வேண்டுமானால் தப்பியோடுங்கள் எனக் கூறியுள்ளார்.

மிக அருகில் துப்பாக்கி சத்தம் கேட்டதும் 6 பேரும் சேறும் சகதியுமான கரடு முரடான பாதையில் உயிரைக் கையில் பிடித்த படி 3 கி.மீ., துாரம் ஓடி வந்து மலையில் இருந்து கீழே வந்தனர். பின்னர் அங்கிருந்து அனந்த்நாக் வந்துள்ளனர்.

இது குறித்து சையத் உஸ்மான் கூறுகையில், 'சுற்றுலா தலத்தில் 500க்கும் மேற்பட்டவர்கள் இருந்தனர். துப்பாக்கி சூடு நடந்தபோது அதே இடத்திற்கு மிக அருகில் இருந்தோம். பெரும்பான்மையான சுற்றலா பயணிகள் துப்பாக்கி சூடு நடப்பதை அறியாமல் இடத்தை ரசித்து கொண்டிருந்தனர். 10 நிமிடம் முன் தாக்குதல் நடந்திருந்தால் நாங்களும் சிக்கி இருப்போம்.



தாக்குதல் நடந்த போது போலீசாரும், ராணுவத்தினரும் அங்கு இல்லை. மலையில் இருந்து கீழே இறங்கும் போது எதிரே போலீசாரும், ராணுவத்தினரும் சென்றனர். நாங்கள் அடுத்த ஒரு மணி நேரத்தில் அனந்த்நாக் வந்து விட்டோம். அங்கிருந்து தமிழக அரசின் உதவி எண்ணுக்கு போன் செய்தோம். 4 மணி நேரத்தில் தமிழக அரசின் ஐ.ஏ.எஸ்., அதிகாரி அஸ்தாப், நாங்கள் தங்கியிருந்த ஓட்டலுக்கு வந்தார். அவர், ஸ்ரீநகர் சாலையில் பிரச்னை எதுவும் இல்லை நீங்கள் ஸ்ரீநகர் சென்று டில்லி செல்லலாம் என கூறினார். எந்த உதவி என்றாலும் தொடர்பு கொள்ளும் படி தெரிவித்தார். டில்லி வரும் வரை தமிழக அதிகாரிகள் தொடர்பு கொண்டு பேசினர்.

இன்று (நேற்று) டில்லி வந்ததும். எங்களுக்கு உணவு கொடுத்து தங்க வைத்தனர். மாலை டில்லியில் இருந்து புறப்பட்டு விமானம் மூலம் சென்னை வந்து விடுவோம்' என்றார். இச்சம்பவம் செஞ்சியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த 6 சுற்றுலாப் பயணிகளில் ஒருவரான ராஜா, கோணை, அப்பம்பட்டு பகுதி வி.ஏ.ஓ.,வாக பணி புரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உயிர்ப்பித்தல்!

**இந்த வகை குருத்தனு செல்களைச் சிகிச்சையில் பயன்படுத்துவதற்கு அனுமதியில்லை. காரணம், கருவிலிருந்து இந்த வகை குறுத்தனுக்களைப் பிரித்தெடுப்பது. அந்தக் கருவையே அழித்துவிடும் என்பதால். இதில் சட்டம் மற்றும் நெறிமுறை சிக்கல்கள் உண்டு. அதே போல மொத்த உயிரினத்தையுமே உருவாக்கக்கூடிய குருத்தனு செல்களை வழவனிழவநவெ என்று சொல்வார்கள்.**



படியெடுப்பு என்கிற வார்த்தையின் ஆங்கிலப் பெயரான உடமுலைவை தான் அனைவருக்கும் பரிட்சயம். இந்த அறிவியல் உத்தியைப் பல திரைப்படங்களும், நாவல்களும் பல வருடங்களாகப் பயன்படுத்தி வருகின்றன. இதன் பின்னால் இருக்கும் அறிவியல் கோட்பாட்டைப் பற்றி அறிந்துக் கொள்வதற்கு முன்னால், பரிணாம வளர்ச்சியில் இருக்கும் ஒரு முக்கியமான நிகழ்வைப் பற்றிப் பார்ப்பது அவசியம்.

ஓடியாடி விளையாடும் போது கீழே விழுந்து கைகளைச் சிராய்த்துக் கொண்ட சில நாட்களுக்குப் பிறகு, தானாகக் காயம் பட்ட அந்த இடத்தில் தோல் வளர்ந்திருப்பது ஒரு சாதாரண நிகழ்வு. ஆனால், இந்த நிகழ்வுக்குப் பின்னால் ஒரு முக்கியமான அறிவியல் கோட்பாடு இருக்கிறது. பொதுவாக, உடலில் ஏதேனும் காயம் பட்டால், அந்த இடத்தைச் சரி செய்வதற்காக, அந்த இடத்தில் புதிதாக செல்கள் உருவாகும். இந்தச் செல்கள் எங்கிருந்து வருகின்றன?

இந்தப் புதிய செல்கள் எல்லாம் குருத்தணுக்களில் **(stem cells)** இருந்து வருகின்றன. ஒரு செல் இரண்டாக, பின் நான்காக, அதன்பின் எட்டாகப் பிரியும். இப்படித்தான் ஒரு செல்லிலிருந்து இவ்வளவு பெரிய மனித உடல் தோன்றுகிறது. இந்தச் செயல்முறையின் போது, குருத்தணுக்கள் உடலின் ஒவ்வோர் உறுப்புக்கும் ஏற்றவாறு உருவத்திலும் செயலிலும் வேறுபட்டு அந்தந்த உறுப்பின் தனித்துவமான செல்களாக மாறும். இந்த வகை குறுத்தணுக்களை அரடவனிழவநவெ ளவநஅ உநடடள என்பர். இந்நிகழ்வின் போது அனைத்துக் குறுத்தணுக்களும் வேறுபடுவதில்லை. சில குருத்தணுக்கள், ஒவ்வோர் உறுப்பிலும் அதற்கென்றே உரிய பிரத்யேகமான இடத்தில் குறுத்தணுக்களாகவே இருக்கின்றன. ஒவ்வோர் உறுப்பிலும் குருத்தணுக்கள் இருக்கும் இடத்தை ெைஉாந என்று அழைப்பர்.

காயம் ஏற்படும் போது, பழுதான இடத்தைச் சரிசெய்வதற்காக, அந்த உறுப்பிலிருக்கும் குறுத்தணுக்கள்



காயம் பட்ட அந்த உறுப்பிற்கு ஏற்றவாறு வேறுபடும். குருத்தணுக்களுக்குத் தங்களைத் தாங்களே புதுப்பித்துக் கொள்ளும் திறன் இருப்பதால், குருத்தணுக்களின் எண்ணிக்கைக் குறையாது. இப்படித்தான் கீழே விழுந்து கைகளைச் சிராய்த்துக் கொள்ளும் போது, தோல் செல்களாக அதற்குரிய குருத்தணுக்கள் வேறுபடுகின்றன. பிறகு, மிச்சமிருக்கும் குருத்தணுக்கள் தாமாகவே எண்ணிக்கையில் பெருகி ஏற்கெனவே இருந்த தங்கள் எண்ணிக்கையைத் தக்க வைத்துக் கொள்கின்றன.

இதைவிட மிக சுவாரசியமான நிகழ்வு ஒன்று இருக்கிறது. ஐந்திலிருந்து ஆறு நாட்கள் வரையான கருவில் இருக்கும் செல்கள் அனைத்தும், மனிதனின் உடலில் இருக்கும் அத்தனை உறுப்புகளையும் உருவாக்கும் ஆற்றல் கொண்டது. அதாவது, அந்தச் செல்களால் இதயம், நுரையீரல், மூளை போன்ற அத்தனை உறைப்புகளின் செல் களாகவும் வேறுபட முடியும். அந்த வகை குறுத்தணு செல்களுக்கு **pluripotent stem cells** என்று பெயர். ஆனால், அந்த செல்களால் ஒரு முழு மனிதனை உருவாக்க முடியாது. காரணம், இந்த வகை குருத்தணுக்களால் கருவுக்கு ஊட்டமளிக்கும் தொப்புள்கொடி, நஞ்சுக்கொடி போன்ற உறுப்புகளின் செல்களை உருவாக்க முடியாது. இந்த உறுப்புகள் இல்லாததால் மனித உடலில் இருக்கும் அத்தனை உறுப்புகளையும் உருவாக்க முடியும். ஆனால் அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்த ஒரு மனிதனை உருவாக்க முடியாது.



இந்த வகை குருத்தணு செல்களைச் சிகிச்சையில் பயன்படுத்துவதற்கு அனுமதியில்லை. காரணம், கருவிலிருந்து இந்த வகை குறுத்தணுக்களைப் பிரித்தெடுப்பது, அந்தக் கருவையே அழித்துவிடும் என்பதால். இதில் சட்டம் மற்றும் நெறிமுறை சிக்கல்கள் உண்டு. அதே போல மொத்த உயிரினத்தையுமே உருவாக்கக்கூடிய குருத்தணு செல்களை வழவனிழவநவெ என்று சொல்வார்கள். மூன்றிலிருந்து நான்கு நாட்கள் வரையான கருவின் செல்கள் அனைத்தும் முழுமையான மனிதனை உருவாக்கும் ஆற்றல் கொண்டது. இதிலும் நெறிமுறை சிக்கல்கள் உள்ளதால் இந்த வகை குறுத்தணுக்களைப் பயன்படுத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குருத்தணுக்கள் கரு உருவான நொடியிலிருந்து உறுப்புகளை உருவாக்குவதற்கும், உறுப்புகள் உருவான பிறகு அவற்றைப் பழுதுப் பார்ப்பதற்கும்தான் அர்ப்பணிக்கப்பட்டன. இந்தச் செயல்முறை மனிதனிடம் மட்டும்தான் இருக்கிறதா?



ஒரு செல் உயிரினங்கள் தொடங்கி மனிதன்வரை இந்தச்செயல்முறை பரிணாம வளர்ச்சியின் ஒரு முக்கியப் பகுதியாகக் கருதப்படுகிறது. அனைத்து உயிரினங்களுமே சிறு சிறு மாற்றங்களுடன் இந்த அறிவியல் கொள்கையைத் தக்கவைத்துக் கொள்கின்றன. தட்டைப்புழுக்களை (கடயவ றழசஅள) துண்டுத்துண்டாக வெட்டினாலும், ஒரு சிறிய துண்டிலிருந்து தன்னுடைய முழு உடலையும் உருவாக் கிக் கொள்ளும் ஆற்றல் அதற்குண்டு. அதன் உடலில் **pluripotent stem cells** அதிகமாக இருப்பதுதான் இதற்குக் காரணம்.

பல்லி வகையைச் சார்ந்த சாலமன்டர் எனும் உயிரினத்தின் கால்களை வெட்டினாலும், அது முன்பு இருந்தது போல முழுமையாகத் தனது கால்களை மீண்டும் வளர்த்துக் கொள்ளும். அதே போல பல்லிகளின் வால் துண்டிக்கப்பட்டாலும், மீண்டும் அது முழுமையாக வளர்ந்துவிடும். இதற்கெல்லாம் காரணம் குருத்தணுக்கள்தான். இவை அனைத்தும் பிழைத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட பண்புகள். குறிப்பாக எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்வதற்காக உபயோகப்படுத்தப்பட்டவை. கடல்வாழ் உயிரினங்களிலும் இந்தப் பண்பு உண்டு. மனிதனின் கல்லீரல், தோல், ஒரு வகை இதய செல்கள் உட்பட சில உறுப்புகளுக்கு இந்த உயிர்ப்பித்துக் கொள்ளும் ஆற்றல் உண்டு. குறிப்பாக 70 சதவீதக் கல்லீரலை நீக்கிய பிறகும், முழுமையான கல்லீரலைத் திரும்பிக் கொண்டு வரும் ஆற்றல் அந்தக் கல்லீரல் குருத்தணுக்களுக்கு (ாநியவளை ளவநஅ உநடடள) உண்டு. இவ்வளவு நன்மைகளுடன் இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் நிலையில், ஏன் இன்னும் இதற்கான மருத்துவ சிகிச்சை முறை நடைமுறையில் இல்லை?

வயதாக ஆக இந்தக் குருத்தணுக்களின் ஆற்றல் குறையத் தொடங்கும். அதனால், சேதமடைந்த உறுப் புகளைச் சரிசெய்வது சிரமமாகும். இது தவிர மதுப்பழக்கம் உடையவர்களுக்குக் கல்லீரலின் புதுப்பிக்கும் ஆற்றல் ஆரோக்கியமாக இருப்பவர்களைவிடக் குறைவாக இருக்கும். ீடரசணிழவநவெ குருத்தணு வகை கரு நிலையில் மட்டும்தான் இருக்கும். அதுவும் குறிப்பிட்ட நாட்கள் வரைதான். அதன் பிறகு எல்லாம் அரடவனிழவநவெ குருத்தணுக்களாக மட்டுமே இருக்கும்.

இதை மையமாக வைத்து தற்போதிருக்கும் அறிவியல் உலகம் உறுப்பு படியெடுப்பு **(organ cloning)** என்னும் புதிய உத்தியைக் கையாள தொடங்கியுள்ளது. இந்த உறுப்பு படியெடுப்பு முறையில் பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், இயற்கையின் அற்புதமான கட்டமைப்பைப் படியெடுப்பதில் பல சவால்கள் உள்ளன. கூடவே நெறிமுறை சிக்கல்களும் சட்ட சிக்கல்களும் உண்டு. ஆனால், இந்த உறுப்பு படியெடுப்பு முறை மட்டும் வெற்றி பெற்றால், தவிர்க்க முடியாத சிகிச்சை முறையாக இது மாறும் என்பதில் எந்த ஐயமுமில்லை. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் ஏற்படும் ஒவ்வாமைகளை இந்த படியெடுப்பு முறை முறியடிப்பதற்கான வாய்ப்பு அதிகம்.

இன்னும் ஆராய்ச்சியிலிருக்கும் இந்த முறையைப் பயன்படுத்தி, ஆய்வகத்தில் கோழியின் செல்களை மட்டுமே வைத்து தயாரித்த கறியை அமெரிக்க நிறுவனம் ஒன்று தயாரித்து உள்ளது. அதை உணவு மற்றும் மருந்து பாதுகாப்பு நிர்வாகம் அங்கீகரித்துள்ளது. ஆனால், தற்போதைக்கு அது சில குறிப்பிட்ட உணவகங்களின் பயன்பாட்டிற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# தென் கொரிய முன்னாள் அதிபர் மூன் ஜே–இன் மீது லஞ்ச புகார்



தென் கொரியா முன்னாள் அதிபர் மூன் ஜே-இன் ஆட்சியில் இருந்த போது, விமான நிறுவனம் ஒன்றிடமிருந்து தன் மருமகன் வாயிலாக 1.2 கோடி ரூபாயை லஞ்சமாக பெற்றதாக அந்நாட்டு அரசு வழக்கு பதிந்துள்ளது.

கிழக்கு ஆசிய நாடான தென் கொரியாவில் 2017 -- 2022 வரை ஜனநாயக கட்சியைச் சேர்ந்த மூன் ஜே இன் அதிபராக இருந்தார். தற்போது மக்கள் சக்தி கட்சியின் ஆட்சி நடக்கிறது. அதிபராக யூன் சுக் யோல் பதவி வகிக்கிறார்.

இங்கு பல முன்னாள் அதிபர்கள் பதவி முடியும் சமயத்தில் அல்லது பதவி விலகிய பின் ஊழல் வழக்குகளை எதிர்கொள்வது வழக்கமாக உள்ளது.

தென் கொரியாவின் முதல் பெண் அதிபரான பார்க் கியுன்-ஹை, 2017ல் ஊழல் குற்றச்சாட்டில் பதவி நீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் முன்னாள் அதிபர் மூன் ஜே-இன் மீது தற்போது அரசு சார்பில் லஞ்ச வழக்கு பதியப்பட்டுள்ளது. தென்கொரியாவின் ஈஸ்டர் ஜெட் விமான நிறுவனம் 2019ல் தாய்லாந்து முதலீட்டாளர்களின் கூட்டு முயற்சியுடன், தாய் ஈஸ்டர் ஜெட் என்ற பெயரில் விமான சேவையை துவங்க திட்டமிட்டது.

அதன் பின் கொரோனா தொற்று காரணமாக, அந்த நிறுவனம் நிதி நெருக்கடியில் சிக்கி பட்ஜெட் விமான சேவை திட்டத்தை கைவிட்டது. இந்த நிறுவனத்தில் 2018 முதல் 2020 வரை தென்கொரிய முன்னாள் அதிபர் மூனின் மருமகன் பல லட்ச ரூபாய் சம்பளத்தில் பணியமர்த்தப்பட்டார்.

அவருக்கு விமான தொழிலில் எந்த முன் அனுபவமும் இல்லை என்றும், லஞ்ச பணத்தை முன்னாள் அதிபர் மூன், இவரது பெயரில் பெற்றதாகவும் தற்போது அரசு வழக்கு பதிந்துள்ளது. தென் கொரியாவில் விரைவில் தேர்தல் நடக்க உள்ள நிலையில், முன்னாள் அதிபர் மீதான லஞ்ச வழக்கு அக்கட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. (ஐ)

# சீக்கிய யாத்ரீகர்களுக்கு விலக்கு: பாகிஸ்தான் தந்திரம்



பாகிஸ்தானில் உள்ள இந்தியர்களை உடனடியாக வெளியேற உத்தரவிட்டுள்ள அந்நாடு, சீக்கியர்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளித்து உள்ளது. இதன் பின்னணியில் அந்நாட்டிடம் உள்ள பிரிவினைவாத சதி அம்பலமாகி உள்ளது.

சீக்கிய மதத்தை நிறுவிய குருநானக்கின் பிறப்பிடம் என்பதால், பாகிஸ்தானில் உள்ள ஜனமஸ்தான் நான்கானா சாஹிப் குருத்வாராவுக்கு ஆண்டுதோறும் சீக்கியர்கள் அங்கு செல்வார்கள். மேலும் சீக்கிய மதம் தொடர்பான சில இடங்கள் பாகிஸ்தானில் உள்ளது. இதனால், ஆண்டுதோறும் 3 ஆயிரம் சீக்கியர்களுக்கு பாகிஸ்தான் அரசு விசா வழங்க வருகிறது.

அதேநேரத்தில் சீக்கியர்களுக்கு என தனி நாடு கோரி காலிஸ்தான் பயங்கரவாதிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்களுக்கு இந்திய அரசு தடை விதித்து உள்ளது. இதனால், இவர்கள் கனடா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் அடைக்கலம் புகுந்து அங்கிருந்த படி இந்தியாவுக்கு எதிராக செயல்படுகின்றனர்.

காஷ்மீரில் பயங்கரவாதிகளை தூண்டிவிட்டு மறைமுக யுத்தம் நடத்தி வரும் பாகிஸ்தான், இந்தியாவிற்கு மேலும் பிரச்னைகளை கொடுக்க வேண்டும் என்பதற்காக காலிஸ்தான் பயங்கரவாதிகளையும் ஆதரித்து வருகிறது. இந்த அமைப்பை சேர்ந்தவர்கள் சிலர் பாகிஸ்தானில் உள்ளனர். அவர்களுக்கு தேவையான வசதிகளை பாகிஸ்தானே செய்து கொடுக்கிறது.

இந்நிலையில், காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து பாகிஸ்தானியர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என மத்திய அரசு உத்தரவு பிறப்பித்து உள்ளது. இதற்கு பதிலடி கொடுக்க நினைத்து பாகிஸ்தானும், இந்தியர்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என உத்தரவிட்டு உள்ளது. இதில் சீக்கியர்களுக்கு மட்டும் விலக்கு அளித்து உள்ளது.

இதன் பின்னணியில் உள்ள பாகிஸ்தானின் தந்திரம் குறித்து வெளியாகி உள்ள தகவல்: இந்தியாவில் இருந்து ஏராளமனோர் தொழில், கல்வி, குடியேற்றம் என ஏராளமான வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். ஆனால், அப்படி செல்பவர்கள் வறுமையில் தவிக்கும் பாகிஸ்தானுக்கு செல்வது என்பது அரிதான ஒன்று. சீக்கியர்கள் மட்டுமே ஆன்மிக யாத்திரையாக பாகிஸ்தான் செல்கின்றனர். தங்களது பயணம் முடிந்த உடன் அவர்கள் தாங்களாகவே இந்தியா திரும்பி விடுவர். ஆனால், தற்போது அந்நாட்டில் இருந்து வெளியேற சீக்கியர்களுக்கு விலக்கு அளித்துள்ளது சந்தேகத்தை கிளப்புகிறது. காலிஸ்தான் பயங்கரவாதிகளை பாகிஸ்தான் ஆதரித்து வருகிறது. தற்போது, அவர்களையும் வெளியேற உத்தரவிட்டால் விஷயம் வேறு மாதிரி ஆகிவிடும். காலிஸ்தான் பயங்கரவாதிகள் மத்தியில் அதிருப்தி ஏற்படும் என அந்நாடு நினைக்கலாம். இவ்வாறு அந்த தகவலில் கூறப்பட்டு உள்ளது. (ஐ)

# ஷிம்லா ஒப்பந்தத்தை ரத்து செய்வோம்: சொல்கிறது பாகிஸ்தான்

காஷ்மீர் தாக்குதல் காரணமாக இந்தியா எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிர்வினையாக, பாகிஸ்தானும் ஷிம்லா ஒப்பந்தத்தை ரத்து செய்வோம் என்று பாகிஸ்தான் மிரட்டல் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் தலைமையில் நடந்த கூட்டத்திற்கு பின்பு வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது: ஷிம்லா ஒப்பந்தம் உள்ளிட்ட அனைத்து இரு தரப்பு ஒப்பந்தங்களும் நிறுத்தும் உரிமையை பாகிஸ்தான் பயன்படுத்தும்.

வாகா எல்லை உடனடியாக மூடப்படுகிறது. இந்த வழியாக நடக்கும் அனைத்து வர்த்தகங்களுக்கும் நிறுத்திவைக்கப்படுகிறது. இந்த வழியாக வந்தவர்கள் அனைவரும் ஏப்.,30க்குள் வெளியேற வேண்டும்.

சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை ரத்து செய்வது என்ற இந்திய அரசின் முடிவை ஏற்க முடியாது. பாகிஸ்தானின் தேச நலனுக்கு தண்ணீர் முக்கியமானது. 24 கோடி பேரின் வாழ்வாதாரமாக உள்ளது. எந்த விலை கொடுத்தாவது அதனை காப்போம். சிந்து நதிநீர் ஒப்பந்தப்படி பாகிஸ்தானுக்கு வரும் தண்ணீரை நிறுத்துவது அல்லது மடைமாற்றுவது என்பது போருக்கு வழிவகுக்கும்.

சார்க் கூட்டமைப்பு நடுகளுக்கான விசா விலக்கு ரத்து இந்தியாவுக்கு ரத்து செய்யப்படுகிறது. இந்த விசா மூலம் வந்தவர்கள் உடனே வெளியேற வேண்டும். இதில் சீக்கியர்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுகிறது.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய பாதுகாப்பு, கடற்படை மற்றும் வான்படை அதிகாரிகள் ஏப்.,30ம் தேதிக்குள் வெளியேற வேண்டும். இந்திய தூதரகத்தில் உள்ள பதவிகள் அனைத்தும் ரத்து செய்யப்படுகிறது. இந்த பதவியில் உள்ளவர்கள் உடனே வெளியேற வேண்டும்.

இந்தியாவுக்கு சொந்தமான அல்லது இந்தியர்கள் இயக்கும் விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்த தடை விதிக்கப்படுகிறது.

இந்தியா உடனான அனைத்து வர்த்தகமும் நிறுத்தி வைக்கப்படுகிறது. மூன்றாவது நாடு வழியாக நடக்கும் வர்த்தகமும் நிறுத்தம்.

பாகிஸ்தானின் இறையாண்மை, பாதுகாப்புக்கு ஏற்படும் எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் எதிர் நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து துறைகளிலும் எதிர் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு பாகிஸ்தான் தெரிவித்து உள்ளது. (ஐ)



# பயங்கரவாதி ஒசாமா பின்லாடனும், பாகிஸ்தான் ராணுவ தளபதியும் ஒன்று தான்

அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லாடனும், பாகிஸ்தான் ராணுவ தளபதி அசிம் முனீரும் ஒன்று தான் என பெண்டகன் முன்னள் அதிகாரி மைக்கேல் ரூபின் கூறியுள்ளார்.

பெண்டகன் முன்னாள் அதிகாரி மைக்கேல் ரூபின் ஏஎன்ஐ செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: ஒசாமா பின்லாடன் மற்றும் பாகிஸ்தான் ராணுவ தளபதி அசிம் முனீர் இடையே ஒரே வித்தியாசம் மட்டுமே உள்ளது. ஒசாமா பின்லாடன் குகையில் வாழ்ந்தார். அசிம் முனீர், மாளிகையில் வசிக்கிறார். அதனை தாண்டி இருவரும் ஒரே மாதிரியானவர்கள். அவர்களின் முடிவும் ஒரே மாதிரி இருக்கும்.

பஹல்காம் தாக்குதல் சம்பவத்திற்கு பதிலடி கொடுக்க ஒரே வழி, பாகிஸ்தானை பயங்கரவாதத்திற்கு நிதியுதவி அளிக்கும் நாடாகவும், அசிம் முனீரை பயங்கரவாதியாக அறிவிக்க வேண்டும்.

பஹல்காம் தாக்குதலை ஏதேச்சையானது என பாசாங்கு செய்யக்கூடாது. அது பன்றிக்கு உதட்டுச்சாயம் போட்டது போன்று ஏற்றுக்கொள்ள முடியாத சமாளிப்பு ஆகும். தாக்குதல் நடத்தப்பட்ட காலகட்டத்தை கவனிக்க வேண்டும். பில் கிளிண்டன் இந்தியா சென்ற போது பயங்கரவாத தாக்குதல் நடந்தது. அதேபோல் துணை அதிபர் ஜேடி வான்சின் இந்திய பயணத்தில் இருந்து கவனத்தை திசை திருப்ப பாகிஸ்தான் விரும்புவது தெரிகிறது. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## புத்தளத்தில்…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

உறவுகளின் இந்தப் போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிக்கையில்,

"2 ஆயிரத்து 984 ஆவது நாளாகவும் எமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். எமது உறவுகளைத் தேடி அலைந்து திரிகின்றோம். இதுவரையில் ஆட்சியில் இருந்த எந்த அரசும் எமக்கான உரிய தீர்வைப் பெற்றுத்தரவில்லை. சர்வதேசத்திடம் ஒரு முகமும் எம்மிடம் ஒரு முகமுமாக அரசு செயற்பட்டு வருகின்றது. தற்போதைய அரசு கூட ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் எமது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உரிய தீர்வு பெற்றுத் தரப்படும் என வாக்குறுதிகளை வழங்கியிருந்த போதிலும் இதுவரையில் எந்தவிதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை." - என்றனர்.

## பஸ் விபத்தில்…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது 10 பாடசாலை மாணவர்கள் உட்பட 28 பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலஞ்ச…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்க கடந்த 10 ஆம் திகதி சாமர சம்பத் தசநாயக்கவின் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவதற்காக ஏப்ரல் 17 ஆம் திகதி இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

ஆனால், சித்திரைப் புத்தாண்டு காரணமாக ஏப்ரல் 17 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஆஜராகவில்லை.

இதனையடுத்து, எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று திங்கட்கிழமை மீண்டும் அழைப்பாணை விடுக்கப்பட்டது.

ஆனால், தனது சட்டத்தரணி வெளிநாடு சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பிய பின்னர் இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஆஜராகுவேன் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் ஆஜராகுவார் என அவரது சட்டத்தரணி இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தெல்லிப்பழை…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. இறப்புக்கான காரணம் தொடர்பில் இன்னமும் உத்தியோகபூர்வமான தகவல்கள் வெளியிடப்படவில்லை.

அவரது சகோதரி ஒருவரும் அதே மகளிர் இல்லத்திலேயே தங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மித்தெனிய…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

கடந்த பெப்ரவரி மாதம் மித்தெனிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் கஜ்ஜா எனப்படும் அருண விதானகமகே மற்றும் அவரது இரண்டு பிள்ளைகள் உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்தியதாகத் தெரிவிக்கப்படும் சந்தேகநபரே இவ்வாறு இந்தியாவில் கைது செய்யப்பட்ட நிலையில், நாடு கடத்தப்பட்டிருந்தார்


## பாப்பரசர்….

(முதலாம் பக்கத் தொடர்ச்சி…)

இரங்கலைத் தெரிவித்தார்.

பின்னர், அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் குறிப்பு எழுதி, பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் மறைவு குறித்து உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

# பாடசாலையில் திடீரென மயங்கி வீழ்ந்த 16 வயது மாணவி உயிரிழப்பு மட்டக்களப்பில் சம்பவம்!



மட்டக்களப்பு கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவி ஒருவர் வகுப்பறையில் மயங்கி வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார். கிரான்குளம், பிரிவு 8 அமரசிங்க வீதியைச் சேர்ந்த 16 வயதுடைய இராஜன் வினோஜினி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி க.பொ.த சாதாரண தரத்தில் கல்விகற்றுவருபவர் ஆவார்.

இன்றையதினம் பகல் 12.30 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவி வழமைபோல இன்று பாடசாலைக்கு சென்று கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த நிலையில் வகுப்பறையில் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார்.

இதனையடுத்து மாணவியை செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பின்னர் அங்கிருந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியை பெரும் நடவடிக்கையை பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிசார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பாசையூருக்கு கண்காணிப்பு பயணம் மேற்கொண்ட அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்!

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் யாழ். பாசையூருக்கு இன்றையதினம் (25) கண்காணிப்பு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்த பயணத்தின் போது அமைச்சர் பாசையூர் மீன் சந்தை, இறங்குதுறை பாசையூரிலுள்ள சென். அன்ரனிஸ் மைதானம் என்பவற்றுக்கு சென்று கண்காணிப்பை மேற்கொண்டிருந்தார்.

அத்துடன் பாசையூர் கடற்றொழில் சங்கத்துடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது கடற்றொழிலாளர்கள் மற்றும் மக்களால் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் தொடர்பில் அமைச்சரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

மேலும் பாசையூரிலுள்ள சென். அன்ரனிஸ் மைதானத்துக்கும் அமைச்சர் சென்றிருந்த வேளையில், மைதானத்தை விருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிமொழியை அமைச்சர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா, ரம்போடை உட்பட 10 இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk